# அல் குர்ஆன் பற்றிய விசேட தகவல்கள்

### நூஹ் நபியின் கப்பல்-1

அல்குர்ஆன் இறைவனால் அருளப்பட்டது தான் என்பதற்கு மேலும் பல வரலாற்றுச் சான்றுகள் அதிலே மின்னிக்கொண்டிருக்கின்றன. அதை வான்மறை பின்வருமாறு கூறுகிறது :

سَنُرِيهِمْ آيَاتِنَا فِي الْآفَاقِ وَفِي أَنفُسِهِمْ حَتَّى يَتَبَيَّنَ لَهُمْ أَنَّهُ الْحَقُّ (41:53)

நிச்சயமாக குர்ஆனாகிய இவ்வேதம் உண்மையானது தான் என்று அவர்களுக்குத் தெளிவாகும் வரையில் நம்முடைய அத்தாட்சிகளை உலகின் பல பாகங்களிலும் அவர்களுக்குள்ளாகவும் அதிவிரைவில் நாம் அவர்களுக்குக் காண்பிப்போம்.

**அல்-குர்ஆன்-சூரா ஃபுஸ்ஸிலத்41:53**

என்று கூறிய இறைவன் தனது ஏகத்துவ நெறியின் மீதும் தனது தூதரின் சத்தியப் போதனையின் மீதும் நம்பிக்கையும் உறுதிப்பாடும் ஏற்படுவதற்காக உலகம் தோன்றியது முதல் பல வேறு அத்தாட்சிகளையும் சான்றுகளையும் அவ்வப்போது காட்டிக்கொண்டே இருக்கிறான்.

### நூஹ் நபி அலைஹிஸ்லாம் மின் கப்பல்

அத்தகைய சான்றுகளில் ஒன்று தான் நபி நூஹ் (அலைஹிஸ்லாம்) அவர்களின் மரக்கலமாகும்.

ஏறத்தாழ ஐயாயயிரம் ஆண்டுகளுக்கு முன் – நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நூஹ் (அலைஹிஸ்லாம்) அவர்கள்! இவ்வுலகில் தொள்ளாயிரத்து ஐம்பது ஆண்டுகள் தெள்ளமுதப் பிரச்சாரம் செய்தபோது அக்கால மக்களில் பெரும்பாலோர் அவர்களின் போதனை களை ஏற்கவில்லை. மாறாக அவர்களுக்கு பல இன்னல்களையும் இடர்களையும் இழைத்து வந்தனர்.

இவர்களின் வழிகேடுகளும் வன் கொடுமைகளும் வரம்பு மீறவே, எச்சரித்தபடியே அவர்கள் பெரும் வெள்ளப் பிரளயத்தால் அழிக்கப்பட்ட வரலாற்றினை நாம் அறிவோம். நூஹ் (அலைஹிஸ்லாம்)அவர்களையும் அவர்கள தம் நம்பிக்கையாளர்களையும் சுமந்து சென்ற கப்பல் ஜூதிமலை முடியில் தட்டி நின்று விட்டது.

وَاسْتَوَتْ عَلَى الْجُودِيِّ 11: 44

ஜூதி மலை முகட்டில் தட்டி நின்று விட்டது. **( அல் குர்ஆன் 11:44)**
நூஹ் (அலைஹிஸ்லாம்) அவர்களும் ஏனையோரும் கப்பலிலிருந்து நலமே இறங்கினர்.

وَقِيلَ بُعْداً لِّلْقَوْمِ الظَّالِمِينَ 11: 44

அக்கிரமம் செய்த மக்களுக்கு ( இத்தகைய ) அழிவு தான் **( அல் குர்ஆன் 11.44)**
அக்கிரமம் செய்வோர் இவ்வாறே அழிக்கப்படுவர் என்பதை உலக மக்களுக்கு அறிவுறுத்தவே சொல்லப்பட்ட இந்த வரலாற்றை இறைவன் முடிக்கும்போது இப்படிக் கூறுகின்றான் மாமறையில்.

فَأَنجَيْنَاهُ وَأَصْحَابَ السَّفِينَةِ وَجَعَلْنَاهَا آيَةً لِّلْعَالَمِينَ 29:15

நாம் அவரை (நூஹ் நபி அலைஹிஸ்லாம் மையும் , (அவருடன்) கப்பலில் இருந்தவர் களையும் காப்பாற்றினோம். மேலும் அக்கப்பலை அகிலத்தாருக்குக்கோர் அத்தாட்சியாக ஆக்கினோம்.

**அல்-குர்ஆன் 29:15**